## 1.3 மாவட்ட ஊராட்சிகளின் நிர்வாக செலவினங்களுக்கு ஒதுக்கீடு செய்தல்

ஊரக வளர்ச்சி ( சி.1) துறை

அரசாணை (நிலை) எண். 232 நாள் : 16.10.1996

**ஆணை**

ஊராட்சி தேர்தல்களுக்குப் பின்னர் மாவட்ட ஊராட்சிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடன் தனி அலுவலகங்களில் இயங்க இருக்கின்றன. அவைகளின் நிர்வாகச் செலவிற்கு ஒரு வரையறை ஏற்படுத்துவது அவசியமாகும். மத்திய அரசு திட்டங்களுக்காக ஒதுக்கீடாகும் தொகையில் ஒரு குறிப்பிட்ட அளவு மாவட்ட ஊராட்சி வளர்ச்சி முகமையின் நிர்வாக செலவிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே ஒவ்வொரு மாவட்ட ஊராட்சிக்கும் பல்வேறு திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் தொகையில் ஒரு குறிப்பிட்ட தொகையை அதன் நிர்வாக செலவிற்கென நிர்ணயம் செய்வது பற்றி அரசு ஆழ்ந்து பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின்னர், 1996–97ம் ஆண்டில் பரவலாக்கப்பட்ட மாவட்ட திட்டங்களின் ஒதுக்கீடுகள் மற்றும் பத்தாவது நிதிக்குழுவின் பரிந்துரைக்கேற்ப அளிக்கப்படும் நிதி ஆகியவைகளின் மொத்த ஒதுக்கீட்டில் 5 % (ஐந்து சதவீதம்) தொகையை மாவட்ட ஊராட்சியின் நிர்வாக செலவிற்கு செலவிடலாம் என அரசு ஆணையிடுகிறது. செலவிற்கான இவ்வரம்பு மறு ஆய்வு செய்யப்படும் வரை பின்பற்றப்பட வேண்டும் என ஆணையிடப்படுகிறது.

2. இவ்வாணை நிதித் துறையின் இசைவினை அ.சா.கு.எண்.3601/எப்.எஸ்/பி/96, நாள்.23.09.96ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ்.நாராயண்**
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்